2017 ஜூலை 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 169, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

169—

சிற்பங்களைப் பாதுகாத்தல்

***18163—திரு. ஏ. இரத்தினசபாபதி:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார் கோயிலில் உள்ள அருள்மிகு ஆத்மநாதர் சுவாமி திருக்கோயில் சிற்பங்களைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "அறந்தாங்கி தொகுதி, ஆவுடையார்கோயிலில் உள்ள அருள்மிகு ஆத்மநாதர் சுவாமி திருக்கோயில் சிற்பங்களைப் பாதுகாக்க அரசு ஆவன செய்யுமா?" என்று வினா எழுப்பியிருக்கிறார். புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோயில் வட்டம் மற்றும் நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஆத்மநாதர் சுவாமி திருக்கோயிலின் சிற்பங்கள் புகழ் பெற்றவை. இத்திருக்கோயிலின் சிற்பங்களை சுத்தம் செய்ய இரண்டு பணியாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டுள்ளார்கள். மேலும், சிவனடியார்கள்மூலம் அவ்வப்போது சிற்பங்கள் சுத்தம் செய்து பராமரிக்கப்பட்டு வருகின்றன. மிகுந்த கலை வேலைப்பாடுகள் உள்ள சிலைகள் கம்பி வலை அமைக்கப்பட்டும், சி.சி.டி.வி. கேமரா பொருத்தப்பட்டும் திருக்கோயில் நிருவாகத்தால் கண்காணிக்கப்பட்டும், பராமரிக்கப்பட்டும் வருகின்றன. நவீன தொழில்நுட்பக் கருவிமூலம் தண்ணீர் கொண்டு சுத்தம் செய்தால் சிற்பங்கள் மேலும் பாதுகாப்புடனும், பொலிவுடனும் விளங்கும் என்பதால், திருக்கோயில் நிருவாகத்தால் அதற்கான மதிப்பீடு தயாரிக்க, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2017 ஜூலை 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. இரத்தினசபாபதி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி அவர்கள்.

திரு. எம். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கோயில்களுக்குத் திருப்பணி செய்வதிலும், குடமுழுக்கு செய்வதிலும் வரலாறு படைத்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை இந்த நேரத்திலே வணங்குகிறேன். அவருடைய சிறப்பான வழிகாட்டுதலின்படி நடக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசிடம் ஒரு கோரிக்கை. மாமன்னன் ராஜராஜசோழனால் கட்டப்பட்ட உலகப் பிரசித்தி பெற்ற தஞ்சாவூர் பெரியகோயிலுக்கு குடமுழுக்கு செய்து ஏறத்தாழ 20 ஆண்டுகள் ஆகிவிட்டன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உலகப் பிரசித்தி பெற்ற பிரகதீஸ்வரர் கோயிலுக்கு மீண்டும் குடமுழுக்குப் பணியை இவ்வாண்டே விரைவில் செய்து தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது கோரிக்கை கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, அத்திருக்கோயிலில் கும்பாபிஷேகம் நடைபெற ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. எம். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆவுடையார்கோயில் என்பது மிகப் பிரசித்தி பெற்ற சிற்பக்கலை வாய்ந்த ஓர் ஆலயமாகும். அங்கு மாணிக்கவாசகர்தான் உற்சவராகக் கருதப்படுகிறார். அப்படிப்பட்ட அந்தக் கோயிலில் உள்ள சிற்பங்கள் உலகப் பிரசித்தி பெற்றவை. சிற்பிகளை அமர்த்தும்போது, 'ஆவுடையார் கோயில் தவிர்த்து' என்றுதான் சிற்ப ஒப்பந்தம் போடப்படுகிறது. அப்படிப்பட்ட சிறந்த சிற்பங்களைக்கொண்ட ஆவுடையார் கோயில், ஆத்மநாதர்

சுவாமி கோயிலிலே இருக்கின்ற சிற்பங்கள் அரசின் பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன. அங்கேயுள்ள சிற்பங்கள் முறையாகப் பராமரிக்கப்படாமல் தூசி படிந்து காணப்படுகின்றன. சிற்பங்களைப் பொறுத்தவரையில், பெருவாரியான தவறுகள் நடக்கின்ற காரியமாக இருக்கின்ற காரணத்தால் அவற்றையெல்லாம் பாதுகாக்கின்ற அளவிற்கும், சுத்தம் செய்து வைத்திருப்பதற்கும் அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியதன் அடிப்படையில், ஏற்கெனவே நான் பதிலில் கூறியவாறு, சிற்பங்கள் பொலிவுடனும், பாதுகாப்புடனும் விளங்க வேண்டுமென்பதால் தண்ணீர் கொண்டு நவீன முறையில் சுத்தம் செய்ய அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.

திரு. எச். வசந்தகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் நாங்குனேரி தொகுதியில், கிருஷ்ணாபுரத்தில் அருமையான சிற்பங்கள் அதிகமாக இருக்கின்ற வெங்கடேசப் பெருமாள் ஆலயம் இருக்கின்றது. அந்த ஆலயம் கலைநுணுக்கமிக்கது. எனவேதான், எங்கள் தலைவர் அமரர் ராஜீவ் காந்தி அவர்கள், அந்தக் கோயிலைப் பார்க்க வேண்டுமென்பதற்காகவே வருகைதந்து, ஏறத்தாழ 2 மணி நேரம் அவற்றைப் பார்த்து, ரசித்து, அங்கேயிருக்கின்ற பதிவேட்டில் பெருமையாக அக்கோயிலைப் பற்றி எழுதிச் சென்றிருக்கின்றார்கள். கிருஷ்ணாபுரம் கோயிலை இன்னும் கொஞ்சம் சரியான முறையில் பராமரித்து, அந்தக் கோயிலுக்கு ‘தேர்’ ஒன்று செய்து கொடுத்தால், தமிழக அரசுக்கு நாங்கள் எப்பொழுதும் நன்றியுடையவர்களாக இருப்போம். எனவே, அவற்றை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்துதர நடவடிக்கை மேற்கொள்வார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2017 ஜூலை 10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய கோரிக்கையின்படி, நவீன தொழில்நுட்பத்துடன் அந்தக் கோயில் சிற்பங்களைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 170, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

170—

மாணவியர் விடுதி

***12468—முனைவர் கோவி. செழியன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் வட்டம், திருவிடைமருதூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தனக்கென்று வாழாமல் தமிழக மக்களின் நலன் ஒன்றே என வாழ்ந்து வந்த எங்கள் குலச்சாமி இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்குகின்றேன். இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காட்டிய வழியில் நல்லாட்சி செய்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகின்றேன்.